**கண்காணிப்புப்பொறியாளர், பொபது, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், மருத்துவப்பணிகள் திருச்சி-1 அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்: பொறி.கு.ரவிமனோகர், எம்.இ.(ஸ்ட்ரக்ட்),**
**கண்காணிப்புப்பொறியாளர், பொபது.,**

**செயல்முறை ஆணை எண்: 2135 / 2021 / நி.உ.2 / நாள்: 26.10.2021.**

**பொருள்:** பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் பணிநியமனம் **திருமதி.வெ.தரணி, இளநிலை உதவியாளர்** - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து தகுதிகாண்பருவம் துவக்கி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.2496/ PSD-I/ 2020/ நாள்: 29.05.2020.
2. முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது, சென்னை செயல்முறை ஆணை எண். எஸ்.3(3)/35935/ 2020/நாள்: 17.09.2020.
3. தலைமைப்பொறியாளர்(கட்டடம்), பொபது., திருச்சி மண்டலம், திருச்சி செயல்முறை ஆணை எண். எஸ்.1(2)/ 5055/ 2020-9/ நாள்: 21.09.2020.
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.1739-2/2020/நி.உ.2/நாள்: 23.09.2020.

*****

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய போட்டி தேர்வு மூலம் தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதியைச் சார்ந்த நிலை.8 - ரூ.19,500 - ரூ.62,000 என்ற ஊதிய ஏற்ற முறை கொண்ட இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை (2)-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர் நீ.ஆ.து., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களது செயல்முறை ஆணையின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ல் உள்ள பணிவிதி 17(1)-ன் கீழ் தற்காலிக அடிப்படையில் இவ்வலுவலகத்திற்கு பணியமர்வு செய்யப்பட்ட **திருமதி.வெ.தரணி** (பிறந்த தேதி:19.04.1996) இவ்வட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பதவியில் **01.10.2020 முற்பகல்** பணியேற்றார். அன்று முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

2. இவரது கல்வித் தகுதி B.E. (Electronics & Communication Engineering) ஆகும்.

3. இவர் அரசுப் பணியில் பணியாற்ற முழு உடல் தகுதி பெற்றுள்ளார் என குளித்தலை, அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய உதவி அறுவை சிகிச்சை நிபுணரால் (பதிவு எண். 82653) மருத்துவ தகுதி சான்று வழங்கப்பட்டுள்ளது. (பணிப்பதிவேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது)

**(த.பி.பா)**

4. இவருக்கு எதிரே ஒழுங்கு நடவடிக்கையோ, குற்றப்பத்திரிக்கையோ நிலுவையில் இல்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை.

5. இவரது தாய் மொழி தமிழ் ஆகும்.

6. இவர் இளநிலை உதவியாளர் பதவிக்குரிய அனைத்து கல்வித் தகுதிகளையும் பெற்றுள்ளபடியாலும், தாய்மொழி தமிழ் என்பதாலும், அரசுப்பணிக்குரிய மருத்துவ உடல் நலத் தகுதியுடையவராய் உள்ளபடியாலும் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ல் உள்ள பணி விதி 28(1)-ன் கீழ் இவரது பணியை இளநிலை உதவியாளர் பதவியில் அவர் முதன்முதலாக இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 01.10.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அந்நாள் முதல் தொடர்ந்த மூன்றாண்டுகளுக்கு உட்பட்ட இரண்டாண்டு கால தகுதிகாண் பருவம் துவக்கிவைத்து ஆணை வழங்கப்படுகிறது.

7. இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும், தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறுதல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

8. இவர் தகுதிகாண் பருவ காலத்தில் (தற்செயல் விடுப்பு மற்றும் மதச் சார்பு விடுப்பு நீங்கலாக) வேறு எவ்வித விடுப்பு துய்த்தாலும் அதற்கேற்ப தகுதிகாண் பருவம் நிறைவு நாள் தள்ளிப் போகும் என தெரிவிக்கப்படுகிறது

9. இந்த பணிவரன்முறை மாண்புமிகு சென்னை, உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளைக்குரிய நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்கின் தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என்ற நிபந்தனையுடன் திருமதி.வெ.தரணி, இளநிலை உதவியாளருக்கு இவ்வலுவலகத்தில் பணியேற்ற நாளாகிய **01.10.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து தகுதிகாண்பருவம் துவக்கி வைத்து** ஆணை வழங்கப்படுகிறது.

26.10.21

கண்காணிப்புப்பொறியாளர், பொ.ப.து., சார்பில்,
கட்டட(க&ப)வட்டம், மருத்துவப்பணிகள்,
திருச்சி-1.

26.10.21

பெறுநர்

**திருமதி.வெ.தரணி,**
**இளநிலை உதவியாளர், பொ.ப.து.,**
கட்டட (க&ப) வட்டம்,
மருத்துவப்பணிகள், திருச்சி-1.